# மஹேந்ரா பொறியியல் கல்லூரியில் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு

**நாமக்கல், நவ.11:** மஹேந்ரா பொறியியல் கல்லூரியில், எல் &டி கட்டுமான துறை சார்பில் திறன் மேம்பாட்டு மையம் திறக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம், மஹேந்ரா பொறியியல் கல்லூரியில் எல்-டி கட்டுமான துறை சார்பில் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு விழா கல் லூரி தலைவர் பாரத்கு மார் தலைமையில் நடை பெற்றது. சென்னை எல்-டி கன்ஸ்ட்ரக்சன் இணை பொது மேலாளர் முரு கேசன் கலந்து கொண்டு மையத்தை திறந்து வைத் தார்.

அப்போது, இந்த திறன் மேம்பாட்டு மையமானது கட்டுமான பொறியியல் பயிலும் மாணவ, மாண விகளுக்கு கட்டட வடிவ மைப்பு, கான் கீரிட் மேலாண்மை தற்போ தைய தொழிற் துறையின் தேவைகளுக்கு ஏற்ப கான்கிரீட் உறைவித் தல், தொழில் அறிவை மேம்படுத்த உதவும்.



மஹேந்ரா பொறியியல் கல்லூரியில் எல்&டி கட்டுமான துறை சார்பில் திறன் மேம்பாட்டு மையத்தை இணை பொது மேலாளர் முருகேசன் திறந்து வைத்தார். அருகில் கல்லூரியின் தலைவர் பாரத்குமார் உள்ளார்.

மேலும் இந்த மையம் தொழிற்சாலை, கல்வி நிலையங்களுக்கிடை யேயான தொடர்பை வலுபடுத்தும் என்று பேசினார்.

விழாவில் சென்னை எல்-டி கன்ஸ்ட்ரக்சன் துணை பொது மேலா ளர் கண்ணன், முதுநிலை மேலாளர் ராவ், கல்லூ ரியின் செயல் இயக்கு நர் சாம்சன் ரவீந்திரன், முதல்வர் மாதேஸ்வரன், துறைத்தலைவர் வித்யா, செயல் அலுவலர் சிவக்கு மார் மற்றும் பேராசிரியர் கள் மாணவ, மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.